<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை.</u>

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி**, M.A.,M.L.,

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

2026-ம் வருடம் ஜூலை மாதம் 17-ம் நாள் வெள்ளிக் கிழமை

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்:73/2024 *(CNR No.TNSV01004029/2024)*</u>**

மற்றும்

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024 *(CNR No.TNSV01004485/2024)*</u>**

*****

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்:73/2024:</u>**

(நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.20/2023, சிப்காட் காவல்நிலைய குற்ற எண்.60/2019)

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024:</u>**

(நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை ஆண்டு பட்டிகை வழக்கு எண்.923/2022, சிப்காட் காவல்நிலைய குற்ற எண்.60/2019)

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
சிப்காட் காவல் நிலையம்,
குற்ற எண்: 60/2019 . . . குற்ற முறையிடுபவர்

/எதிரிடை/

1. ராஜா (எ) ராஜாசேர்வை,
   த/பெ.கருப்பையா,
   மீனாட்சிநகர், சிவகங்கை.

2. ராஜேஷ்வரன்,
   த/பெ.சுப்பிரமணியன்,
   குருந்தன்குளம்,
   மானாமதுரை தாலுகா.

3. சேகர்,
   த/பெ.அதிகரை,
   குருந்தன்குளம்,
   மானாமதுரை தாலுகா.

4. செல்வராஜ்,
   த/பெ.வேலாயுதம்,
   வேம்பத்தூர், சிவகங்கை தாலுகா.
   தற்சமயம்
   இந்திரா நகர், சிவகங்கை. . . . **எதிரிகள்**

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.17 17:57:16 +0530

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>சிப்காட் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 60/2019 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1. ராஜா (எ) ராஜாசேர்வை,<br>த/பெ.கருப்பையா,<br>மீனாட்சிநகர், சிவகங்கை.<br><br>2. ராஜேஷ்வரன்,<br>த/பெ.சுப்பிரமணியன்,<br>குருந்தன்குளம்,<br>மானாமதுரை தாலுகா.<br><br>3. சேகர்,<br>த/பெ.அதிகரை,<br>குருந்தன்குளம்,<br>மானாமதுரை தாலுகா.<br><br>4. செல்வராஜ்,<br>த/பெ.வேலாயுதம்,<br>வேம்பத்தூர், சிவகங்கை தாலுகா.<br>தற்சமயம்<br>இந்திரா நகர், சிவகங்கை. |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரிகள் மீது இதச பிரிவுகள் 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379-ன் கீழும். |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:73/2024 வழக்கின் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | எதிரிகள் மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024 வழக்கின் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | எதிரிகள் மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை | : | குற்றவாளிகள் இல்லை. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:73/2024 வழக்கின் தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரிகள் 21(4) of Mines and Minerals (Development and Regulation) |

Act, 1957-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024 வழக்கின் தீர்மானம் : | ***முடிவில்,*** எதிரிகள் 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை முன்னிலையில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.20/2023 மற்றும் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.923/2022 என்று கோப்பில் எடுக்கப்பட்டு கு.வி.மு.ச 209 பிரிவின் கீழ் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் 14.07.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.R.பாலமுருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பிரதீபா அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் . . . .

## <u>பொ து வா ன தீ ர் ப் பு ரை-</u>

இவ்வழக்கின் வாதி சிவபாலசுப்ரமணியன் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், 17-சிறுகுடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறார் என்றும், கடந்த 30.03.2019-ம் தேதி காலை 06.00 மணியளவில் வாதியும், சாட்சி-2 கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும் பணியில் இருந்தபோது

மானாமதுரை தாலுகா, வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மணல் அள்ளுவதாக தகவல் தெரிந்து மேற்படி இடத்தை புலத்தணிக்கை செய்வதற்காக சம்பவ இடத்திற்கு சென்றபோது வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மேற்படி எதிரிகள் TN 37 V 4413 என்ற பதிவெண் கொண்ட Leyland லாரியில் உப்பாற்று மணலை சுய இலாப நோக்கத்தோடு எந்தவித அரசு அனுமதியின்றி விற்பனைக்காக திருடி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று சிப்காட் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரிகள், கற்றறிந்த நீதித்துறை நடுவர், மானாமதுரை அவர்கள் முன்பாக முன்னிலையான போது, எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், எதிரிகள் மீதான குற்றம் சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் கு.வி.மு.ச. பிரிவு 209-ன் கீழ் வழக்குக் கோப்பு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது சிறப்பு அமர்வு வழக்கு எண்:73/2024 வழக்கில் உள்ள எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழும் மற்றும் சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024 வழக்கில் உள்ள எதிரிகள் மீது சுமத்தப்பட்ட 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன்

கீழும் குற்றங்களை புரிந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கத்தக்க காரணம் இருக்கின்றது என்று முடிவு செய்து, கடந்த 17.06.2025 அன்று எதிரிகள் மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றங்களைப் பற்றி எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228(1)(ஆ)-ன் கீழ் எதிரிகளிடம் குற்றச்சாட்டுக்களை தமிழில் படித்துக்காட்டி விளக்கிக் கூறியபோது எதிரிகள் 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றங்களை மறுத்துரைத்து, தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறி விசாரணை கோரினார்கள். எனவே, இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 231-ன் கீழ் அரசுத் தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**4)** கனிமவள வழக்குகளில் தனிநபர் புகார் பதிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் ஒரு வழக்கும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் ஒரு வழக்குமாக கோப்பிற்கு எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் மேற்படி இரு வழக்குகளையும் ஒருசேர நடத்த வேண்டுமென்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழக்கண்ட வழக்கில் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

2023(4) CTC 113 : 2023(3) LW 601 : 2023(2) LW (Crl)1: 2023(3) MLJ (Crl) 536 - S.Kumar Vs The District Collector, Kokkirakulam and others – It is held that B. Mines and Mineral (Development and Regulation) Act, 1057 Sections 22 and 23A Compounding of Offence – Jurisdiction of Police – FIR registered for offences under IPC as also MMRD Act – Police have no jurisdiction to compound offences under IPC – Prosecution under IPC and prosecution under MMDR Act are wholly isolated and District and not connected with each other – Compounding of offence

under MMDR Act cannot have any hearing on prosecution initiated under IPC – Police personnel has jurisdiction to compound offences under MMDR Act.

**5)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளும், அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-</u>**

**i**) அ.சா.1 சிவபாலசுப்ரமணியன் தனது சாட்சியத்தில் கடந்த 2019-ம் வருடம் மானாமதுரை வட்டம் சிறுகுடி கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது 30.03.2019-ம் தேதி காலை சுமார் 6.00 மணியளவில் தானும், தனது கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும் பணியிலிருந்தபோது தொலைபேசி மூலமாக வேலூர் உப்பாற்றுப் பகுதியில் திருட்டுத்தனமாக மணல் அள்ளுவதாக கிடைத்த தகவலின் பேரில் அய்யனார் கோவில் பின்புரம் சென்று பார்த்த போது TN 37 V 4413 என்ற பதிவெண்கொண்ட அசோக் லேலாண்ட் லாரியும், TN 63 BE 0564 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor இருசக்கர வாகனமும் அந்த இடத்தில் இருந்த நிலையில் மேற்குறிப்பிட்ட லாரியில் மணலை அள்ளிக்கொண்டிருந்த ராஜா, ராஜேஸ்வரன், செல்வராஜ், சேகர் ஆகிய நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடி ஊருக்குள் சென்றவர்களை தாங்கள் அவர்களின் பெயர் விலாசம் தெரிந்து கொண்டு கிராமத்திற்கு அழைத்துச் சென்று மேற்குறிப்பிட்ட எதிரிகளுடன் கைப்பற்றிய TN 63 BE 0564 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தை காவல்நிலையத்தில் ஒப்படைத்து புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும், மேலும் அன்றைய தினமே பகல் 12.15 மணியளவில் 1வது எதிரி ராஜா(எ) ராஜாசேர்வை தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 என்றும், மேலும் காவல்நிலையத்தில் இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தபோது அத்தாட்சி தயாரிக்கப்பட்டு அதில் தான் சாட்சி கையொப்பம் போட்டதாகவும், மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ.3 என்றும், புகைப்படம் மற்றும் அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ள TN 63 BE 0564 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனம் சா.பொ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 கிருஷ்ணன் தனது சாட்சியத்தில் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது அது அ.சா.ஆ.4 என்றும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதால் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

iii) அ.சா.3 சத்தியமூர்த்தி தனது சாட்சியத்தில் கடந்த 30.03.2019-ம் தேதி மானாமதுரை சிப்காட் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தன்னுடன் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் என்பவர் சிறுகுடி கிராம நிர்வாக அலுவலர் சிவபாலசுப்ரமணியன் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.60/2019 இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-ன் படி பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5-ஐ உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்ததாகவும், அன்றைய தினமே இவ்வழக்கின் எதிரிகளான ராஜா (எ) ராஜேஸ்வரன், சேகர், செல்வராஜ் ஆகியோர்களை கைது செய்து, 1-வது எதிரி ராஜா என்பவர் சாட்சிகள் சிவபாலசுப்ரமணியன் மற்றும் ராஜமாணிக்கம் ஆகியோர்

முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.6 பதிவு செய்ததாகவும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணன், மணி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.7 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 தயார் செய்ததாகவும், இவ்வழக்கில் கைப்பற்றிய TN 63 BE 0564 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தை உரிய படிவம்-91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி படிவம்-91 அ.சா.ஆ.9 என்றும், பின்னர் சார்பு ஆய்வாளர் சதீஸ்குமார் அவர்கள் இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன் பின்பு வழக்கு கோப்பை தான் பார்வையிட்டு சாட்சிகளை மீண்டும் விசாரித்து ஆவணங்களை பார்வையிட்டு அதனடிப்படையில் இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை கடந்த 05.08.2019 அன்று தயார் செய்து உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 என்றும், பின்னர் அன்றைய தினமே எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 379 மற்றும் 21(4) MMDR Act-படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், தனது விசாரணையில் சாட்சி கிருஷ்ணன் சொன்ன செய்தியைத்தான் வாக்குமூலமாக பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

iv) அ.சா.4 அனுஷா மனோகரி (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 29.04.2021-ல் மானாமதுரை வட்ட ஆய்வாளராக பணியாற்றிய போது மானாமதுரை காவல் நிலைய குற்ற எண்.60/2019 தொடர்புடைய வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் பிரிவு 21(4) MMDR Act-படி வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை நடைபெற்று வந்த வழக்கில் கடந்த 30.04.2021-ல் சிவகங்கை,

மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்படி குற்ற நிகழ்வு தொடர்பாக குவிமுச பிரிவு 200-ன் கீழ் தனிநபர் புகாரை எதிரிகள் மீது தாக்கல் செய்ததாகவும், மேற்படி தனிநபர் புகார் அ.சா.ஆ.11 என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**7)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய பகுதிகள் பற்றி எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழ் தமிழில் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் தங்களுக்குப் பாதகமாக தோன்றக் கூடிய பகுதிகளைப் பொய் என மறுத்துள்ளார்கள். மேலும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8)** தற்போது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் சிறப்பு அமர்வு வழக்கு எண்73/2024-ல் உள்ள எதிரிகளுக்கு எதிரான 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழான குற்றச்சாட்டு மற்றும் சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024-ல் உள்ள எதிரிகளுக்கு எதிரான 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>**பிரச்சனைக்குரிய தீர்வு:-**</u>

**9)** இவ்வழக்கில், கடந்த 30.03.2019-ம் தேதி காலை 06.00 மணியளவில் வாதியும், சாட்சி-2 கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும்

பணியில் இருந்தபோது மானாமதுரை தாலுகா, வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மணல் அள்ளுவதாக தகவல் தெரிந்து மேற்படி இடத்தை புலத்தணிக்கை செய்வதற்காக சம்பவ இடத்திற்கு சென்றபோது வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மேற்படி எதிரிகள் அனைவரும் TN 37 V 4413 என்ற பதிவெண் கொண்ட Leyland லாரியில் உப்பாற்று மணலை சுய இலாப நோக்கத்தோடு எந்தவித அரசு அனுமதியின்றி விற்பனைக்காக திருடி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதாக எதிரிகள் மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**10)** எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1சிவபாலசுப்ரமணியன், கிராம நிர்வாக அலுவலர் சம்பவம், புகார் கொடுத்தது, அத்தாட்சி மற்றும் மகஜரில் கையொப்பம் போட்டது பற்றி கூறும் சாட்சி, அ.சா.2 கிருஷ்ணன் பார்வை மகஜரில் கையொப்பம் போட்டது பற்றி கூறும் சாட்சி, அ.சா.3 சத்தியமூர்த்தி, சார்பு ஆய்வாளர் வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, பி.ஆர்.நம்பர் பெற்று விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.4 அனுஷா மனோகரி தனிநபர் புகார் தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஆவார்.

**11)** அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும்

வகையில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் கடந்த 30.03.2019-ம் தேதி காலை 06.00 மணியளவில் வாதியும், சாட்சி-2 கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும் பணியில் இருந்தபோது மானாமதுரை தாலுகா, வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மணல் அள்ளுவதாக தகவல் தெரிந்து மேற்படி இடத்தை புலத்தணிக்கை செய்வதற்காக சம்பவ இடத்திற்கு சென்றபோது வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மேற்படி எதிரிகள் அனைவரும் TN 37 V 4413 என்ற பதிவெண் கொண்ட Leyland லாரியில் உப்பாற்று மணலை சுய இலாப நோக்கத்தோடு எந்தவித அரசு அனுமதியின்றி விற்பனைக்காக திருடி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**12)** எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் அ.சா.1 தனது சாட்சியத்திலும், புகாரிலும், போலீசாரிடம் கொடுத்த வாக்கு மூலத்திலும் எதிரிகள் எந்த சர்வே எண்ணில், எந்த இடத்திலிருந்து லாரியில் மணல் அள்ளிக்கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், மேலும் லாரியில் இருந்த மணலின் அளவு குறித்து புகாரில் சொல்லப்படவில்லை என்றும், அ.சா.1-ஆன புகார்தாரர் புகாரில் சொல்லியுள்ள விசயங்களுக்கும், தனது சாட்சியத்திற்கும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், அதிலும் குறிப்பாக இவ்வழக்கை பொறுத்து தனிப்பட்ட சாட்சிகள் யாரும்

விசாரிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சான்று பொருட்களான மண் வெட்டி மற்றும் சாந்துசட்டி கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், புள்ளிவிபர கணக்கிற்காக மட்டுமே எதிரிகள் மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு அனுமதியில்லாமல் எதிரிகள் மணலை லாரியில் அள்ளி வந்தார்கள் என்பது பற்றியும் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**13)** இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது அவர் தனது குறுக்கு விசாரணையில் தொலைபேசி மூலம் தகவல் கிடைத்த விபரம் பற்றி புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், யார் மூலம் தகவல் கிடைத்தது என்ற விபரம் பற்றி புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், தான் வேறு பணிக்கு செல்லும்போது தனது மேல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக புகார்கொடுக்க வேண்டும் என்றும், போன் மூலம் தகவல் சொன்னேன் என்றும், மேற்படி விவரத்தை ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றும், இவ்வழக்கில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நான்கு எதிரிகளும் தன் நிர்வாக வரையறைக்குள் வரவில்லை என்றும், சம்பவம் குறித்து தான் உடனடியாக காவல்துறைக்கு தகவல் சொல்லவில்லை என்றும், மணல் அள்ளப்பட்டதாக சொல்லப்படும் இடத்தின் சர்வே

எண், விஸ்தீரணம் குறித்து புகாரிலும், விசாரணையிலும் சொல்லவில்லை என்றும், மணல் அள்ளியதற்கு ஆதாரமாக மணலுடன் கூடிய புகைப்படம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றும், அத்தாட்சியில் கைப்பற்றிய லாரி மற்றும் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்து கொள்ளவில்லை என்றும், அது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், லாரியில் இருந்த மணலின் அளவு குறித்து புகாரில் சொல்லவில்லை என்றும், மணலின் அளவீடு குறித்து கனிமவள அதிகாரியிடம் சான்று எதுவும் பெறவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னுடைய கையொப்பம் தவிர வேறு யாருடைய கையொப்பமும் பெறப்படவில்லை என்றும், தான் காவல்நிலையத்தில் பகல் 12.00 மணிக்கு புகார் கொடுத்தேன் என்றும், மணல் அள்ளுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையோ, வாகனங்களையோ குறிப்பிட்டு புகாரிலோ, விசாரணையிலோ சொல்லவில்லை என்றும், கைப்பற்றியதாக சொல்லும் வாகனத்தை யார் மூலம் காவல்நிலையம் கொண்டு சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்திருப்பதை காண முடிகிறது.

**14)** அதேபோல் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த காலத்திலிருந்து 4 மாதங்களுக்கு பிறகு தான் வழக்கு கோப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும், வழக்கு எதிரிகளை நேரடியாக கைது செய்யவில்லை என்றும், அப்போது அவர்களை தான் பார்க்கவும் இல்லை என்றும், புகாரில் வழக்கு சம்பவ இடம் குறித்த சர்வே எண் சொல்லப்படவில்லை என்றும், அதேபோல் திருடப்பட்டதாக சொல்லப்படும் மணலின் அளவு குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றும், வழக்கில் கைப்பற்றிய லாரி மற்றும் இருசக்கர வாகனங்களை யார் நிலையம் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்ற விவரம்

தனக்குத் தெரியாது என்றும், புகார்தாரர் வாகனங்களுடன் எதிரிகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்தது குறித்து நேரம் குறிப்பிடப்படவில்லை என்றும், எதிரிகளை கோப்புகளின் அடிப்படையில் அன்று பகல் 12.00 மணிக்கு கைது செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், புகார் அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு கொடுத்த நிலையில் வழக்கு சொத்து மற்றும் எதிரிகள் கைது நிகழ்வு பகல் 12.00 மணிக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் படிவம்-91ல் இருசக்கர வாகனம் மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்றால் தனக்கு அது பற்றி ஞாபகமில்லை என்றும், அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் எந்த வாகனம் யார் யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றும், அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகளின் பெயர்கள் சாட்சி பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால் அதில் சிவன் சிறுகுடி குரூப் கிராம நிர்வாக அலுவலர் என்று குறிப்பிட்டு இருப்பதால் சிவபாலசுப்ரமணியன் என்பவர்தான் சிவன் என்று குறிப்பிட்டு கையொப்பமிட்டுள்ளார் என்றும், அசல் ஆவணத்தில் சிவன் என்று பெயர் எழுதியும் , கோப்பில் உள்ள நகலில் சிவன் என்று கையொப்பமிட்டும் மாறுபட்ட முறையில் சிவன் கையெழுத்து உள்ளது என்றும், இவ்வழக்கு தொடர்பாக கனிமவளத்துறைக்கு தனியாக தகவல் ஏதும் கொடுக்கப்படவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளிததுள்ளார்.

**15)** மேலும் அ.சா.4 காவல் ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கு தொடர்பாக கனிமவள அதிகாரிகளிடம் தான் தனியாக தகவல் எதுவும் சொல்லவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்திருப்பதை காண முடிகிறது.

**16)** இந்நிலையில் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1

கடந்த 30.03.2019-ம் தேதி காலை 06.00 மணியளவில் வாதியும், சாட்சி-2 கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் என்பவரும் பணியில் இருந்தபோது மானாமதுரை தாலுகா, வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மணல் அள்ளுவதாக தகவல் தெரிந்து மேற்படி இடத்தை புலத்தணிக்கை செய்வதற்காக சம்பவ இடத்திற்கு சென்றபோது வேலூர் கிராமம் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள உப்பாற்றில் மேற்படி எதிரிகள் அனைவரும் TN 37 V 4413 என்ற பதிவெண் கொண்ட Leyland லாரியில் உப்பாற்று மணலை சுய இலாப நோக்கத்தோடு எந்தவித அரசு அனுமதியின்றி விற்பனைக்காக திருடி வந்துள்ளார்கள் என்பதற்கும், எதிரிகள் எந்த சர்வே எண்ணில், எந்த இடத்திலிருந்து லாரியில் மணல் ஏற்றி கொண்டிருந்தார்கள் என்பதற்கும், மேற்படி வாகனத்தில் அள்ளப்பட்ட மணலின் மதிப்பு என்ன என்பதற்கும், எவ்வளவு இடம் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து நீள, அகலம் மற்றும் ஆழம் எதுவும் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்பதற்கும், மேற்படி லாரியில் இருந்த திருடப்பட்ட மணல் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கும் அரசு தரப்பில் யாதொரு ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**17)** இந்நிலையில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளதுபோல் எதிரிகள் அரசு அனுமதியில்லாமல் மணலை லாரியில் அள்ளிக் கொண்டிருந்தார்கள் என்பதும், மேற்படி லாரியில் எவ்வளவு மணல் இருந்தது என்பது குறித்தும் சந்தேகம் எழுகிறது. அதிலும் குறிப்பாக இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில், இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது

பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறும் எதிரிகள் தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை.

**18)** எனவே, மேலே விவாதிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கிணைந்து சீர்தூக்கி பார்க்கும்போது எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:73/2024**

***முடிவில்,*** எதிரி 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:90/2024**

***முடிவில்,*** எதிரி 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண்.48/2025-ல் அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN 63 BE 0564 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை இந்நீதிமன்ற Crl.M.P.No.2512/2019ல் 27.09.2019-ம் தேதியன்று பிறப்பித்த உத்தரவின்படி அதன் உரிமையாளர் சாமிநாதன், த/பெ.கோவிந்தன்

என்பவர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றிருப்பதால், மேற்படி வாகனத்தை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்போ அல்லது மேல்முறையீடு இருப்பின் அதன் முடிவிற்கு பின்போ அதன் உரிமையாளரிடம் உரிய ஆவணங்களின் பேரில் நிரந்தரமாக ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும், மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு வாகனமான TN 37 V 4413 என்ற பதிவெண் கொண்ட லாரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை M.P.13783/2019-ல் 28.06.2019-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அதன் உரிமையாளர் பெற்றுச் சென்றுவிட்டார் என்றும், இவ்வழக்கு குற்றச்சாட்டு குறித்து வைப்புத் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் உரிய நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவும், எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை முறிகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன்பின்பு என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 17-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.17 17:59:20 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:-</u>**
**<u>திருவாளர்கள்:</u>**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை. | சாட்சிகளின் பெயர்கள் | சாட்சிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | சிவபாலசுப்ரமணியன்<br>கிராம நிர்வாக அலுவலர் | சம்பவம் மற்றும் புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி. |

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை. | சாட்சிகளின் பெயர்கள் | சாட்சிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| அ.சா.2 | கிருஷ்ணன் | ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பமிட்டது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.3 | சத்யமூர்த்தி,<br>சார்பு ஆய்வாளர். | இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.4 | அனுஷா மனோகரி,<br>காவல் ஆய்வாளர். | இவ்வழக்கு குற்ற நிகழ்வு தொடர்பாக 200 குவிமுச பிரிவின் கீழ் எதிரிகள் மீது தனிநபர் புகார் தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| சான்றாவணங்களின் வரிசை. | சான்றாவணங்களின் விபரம். | சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம். |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம். | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜர். | அ.சா.1 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம். | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | பார்வை மகஜர் | அ.சா.3. |
| அ.சா.ஆ.8 | மாதிரி வரைபடம். | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | படிவம்-91. | அ.சா.3 |
| அ.சா.ஆ.10 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.3 |
| அ.சா.ஆ.11 | தனிநபர் புகார்(200 Cr.P.C.). | அ.சா.3 |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.17 17:59:37 +0530

17.07.2026

Principal Sessions Judge, Sivagangai

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்:-</u>**

| சான்று பொருட்களின் வரிசை | சான்று பொருட்களின் விபரம். | சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம். |
|---|---|---|
| அ.சா.பொ.1 | TN 63 BE 0564 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம். | அ.சா.1 |

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:-** இல்லை.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.07.17 17:59:45 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை
சிறப்பு அமர்வு வழக்கு
எண்கள்.73/2024
மற்றும்
90/2024
பொதுவான வரைவு - சீரான /
தீர்ப்புரை
நாள்: 17.07.2026